**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 30/2021**

பெயர் : வீரக்குமார் P.W.1. Cross continuation

த/பெ. : பெரமசாமி

தேதி : 23.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி: –**

1. கடந்த 03.03.2026 அன்று தூத்துக்குடியை சேர்ந்த தனசேகர் டேவிட் என்ற வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கும் அவரது சகோதரருக்கும் நானும் எனது சகோதரர் தமிழ் மணி, தமிழ் மணியின் மனைவி வேம்பு ஆகியோர் சேர்ந்து 50 லட்ச ரூபாய் இழப்பீடு கோரி அறிவிப்பு அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பானது இந்நீதிமன்றத்தில் விசாரணையின் போது அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி அறிவிப்பில் இந்த வழக்கு குறித்து சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அத்துடன் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள காசோலை வழக்குகள் பற்றியும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த அறிவிப்பில் 13 காசோலைகள் காணாமல் போனதாக சொல்லியுள்ளேன் என்றால் தற்போது நினைவில் இல்லை.

2. காசோலை காணாமல் போனது சம்பந்தமாக நான் காரைக்கால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கடந்த 20.10.2019 அன்று புகார் கொடுத்துள்ளேன். கடந்த 03.03.2026 அன்று அனுப்பப்பட்ட அறிவிப்பில் நான் கையொப்பம் செய்த 13 காசசோலைகள் காணாமல் போனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வேறு காவல்நிலையத்தில் காசோலைகள் தொலைந்து போனது சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. கடந்த 03.03.2026 அன்று பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பில் 13.12.2019 அன்று காரைக்கால் காவல் நிலையத்தில் ஆய்வாளரிடம் புகார் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் தற்போது நினைவில் இல்லை.

3. மேற்படி அறிவிப்பில் எனக்கும் ஆண்டனி ஐஸ் பேக்டரிக்கும் தொடர்பு உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது காசோலைகள் Current Account

வுடன் தொடர்புள்ளதாகும். காசோலை காணாமல் போனது குறித்து காவல் ஆய்வாளர் தினசரி செய்திதாளில் விளம்பரம் கொடுக்க சொல்லி நான் கொடுக்கவில்லை என்றால் தற்போது எனக்கு நினைவில் இல்லை. காசோலை காணாமல் போனது சம்பந்தமாக நான் நோட்டரி பப்ளிக் கையொப்பம் செய்த சத்திய பிரமாணத்தை காவல் நிலையத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தற்போது நினைவில் இல்லை. கடந்த 20.10.2019 அன்று எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் தற்போது நினைவில் இல்லை.

4. காசோலை காணாமல் போனதாக சொல்லப்படும் தினத்தன்று நான் கடற்கரைக்கு சென்றதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் காசோலைகள் உள்ள புத்தகம் தீர்ந்தவுடன் புதிய காசோலை புத்தகம் வாங்குவேனா அல்லது அதற்கு முன்பு வாங்குவேனா என்றால் 10 காசோலைகள் இருக்கும் போதே புதிய காசோலை புத்தகம் வாங்குவேன். 20.10.2019 அன்று நான் யாருக்கேனும் காசோலை கொடுத்தேனா என்றால் தற்போது நினைவில் இல்லை. எனது அண்ணி பள்ளிப்படிப்பு மட்டும் தான் படித்துள்ளார் என்றால் சரியல்ல. ஆண்டனி ஐஸ் பேக்டரியில் புருஷோத்தமன் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அது சம்பந்தமாக எனக்கு எதிராக குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.

5. காசோலை காணாமல் போனது சம்பந்தமாக டிஆர் பட்டிணம் காவல் நிலையத்திற்கு சென்று காசோலை காணமாமல் போன இடத்திற்கு சென்று வந்ததற்கான செல்போன் டவர் ட்ராக்கிங் ரிப்போர்ட் சமர்பித்துள்ளேனா என்றால் தற்போது நினைவில் இல்லை. நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரதிவாதிக்கு அரசுக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்துள்ளார் என்று நீதிபேராணை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் புதிதாக கட்டிவரும் தொழிற்சாலையை எதிர்த்து மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி முனைவர் பட்டம் பெற்று தொழிலில் நன்கு முன்னேரி வருகிறார் என்றாலும், அவரது முன்னேற்றத்தை தடுக்க வேண்டும் என்பதற்காக அவர் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

6. ஆண்டனி ஐஸ் பேக்டரி தொடங்குவதற்கான அனைத்து தொழில் கட்டமைப்புகளையும் பிரதிவாதியிடம் தான் ஒப்படைத்துள்ளோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அண்ணனுக்கு தான் தெரியும். ஆண்டனி ஐஸ் பேக்டரியின் இயந்திரங்கள் நிறுவுவதற்கான Quatation களை பிரதிவாதி என்னிடம் தான் கொடுத்தார்

என்றால் சரியல்ல. நான் ஆண்டனி ஐஸ் பேக்டரிக்கு வடக்கில் உள்ள இடத்தை வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அது சம்பந்தமாக எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பண பரிவர்த்தனை இருந்தது என்றால் சரியல்ல. 25.10.2019 அன்று டிஆர் பட்டிணத்தில் கொடுக்கப்பட்ட புகாரில் 42 காசோலைகள் காணாமல் போனதாக பொய்யாக புகார் அளித்து, காவல் நிலையத்தை ஏமாற்றி, காணாமல் போனதற்கான சான்றிதழ் பெற்று அதனை வைத்து காசோலை காணாமல் போனதாகவும், உள்நோக்கத்துடன் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்து மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.